**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.862/2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.கொளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனியாண்டி | தொழில் | : தனியார் கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : பெருமாள் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : தாசரிபட்டி | வயது | : சுமார் 77 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 17.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், தாசரிபட்டி கிராமம், அண்ணாநகர், விலாசத்தில் வசிக்கும் பெருமாள் அவர்கள் மகன் வயது சுமார் 77 உள்ள முனியாண்டி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 04.09.2019 | வாதிக்கு செந்தில் குமார் எழுதிக்கொடுத்த சொல்லக்கூடிய கடனுறுதிசீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

3 மற்றும் 4 பரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

பணம் கொடுத்தாக சொல்லகூடிய நிலையில் யாரிடம் பணத்தை கொடுத்தேன் என்றால்? செந்தில் குமாரிடம் பணம் கொடுத்தேன். செந்தில் குமார் உயிருடன் இருக்கிறார என்றார் ? இறந்துவிட்டார். செந்தில் குமார் இறந்த பிறகு இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் ? சாந்தமணி மற்றும் அவரது குழந்தைகளை தரப்பினராக சேர்த்துள்ளேன். செந்தில்குமார் என்பவரின் தாயார் உயிருடன் உள்ளார என்றால் ? இல்லை, செந்தில் குமார் இறந்து ஒரு மாதத்தில் அவரது தாயார் இறந்து விட்டார். 3, 4 பிரதிவாதிகளுக்கு வயது எவ்வளவு இருக்கும் என்றால் ? மகளுக்கு வயது 16க்கு மேல் இருக்கும், மகனுக்கு வயது 16க்கு குறைவாக இருக்கும். மைனர் குழந்தைகளை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு கட்டுப்படுத்தாது என்றால் ? சரியல்ல.

தொடர்சியான விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது

Takendown by me in opencourt and
Readover by me and acknowledged
by him/her to be correct.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.17 19:21:01 +0530

Sub Judge,
Oddanchatram